# CAT

# வானத்திலிருந்து பூமியை நோக்கி

## சித்திரவதைக்கு எதிரான குழுவின் பரிந்துரைகளும், இலங்கையும்

RIGHT TO LIFE
HUMAN RIGHTS CENTRE

# “CAT”

# வானத்திலிருந்து பூமியை நோக்கி

சித்திரவதைக்கு எதிரான குழுவின் பரிந்துரைகளும், இலங்கையும்

வெளியீடு
Right to Life Human Rights Centre

அனுசரணை
Open Society Foundations

# “CAT”

## வானத்திலிருந்து பூமியை நோக்கி

சித்திரவதைக்கு எதிரான குழுவின் பரிந்துரைகளும், இலங்கையும்

**கட்டுரையாக்கம்:** புபுது ரண்திம

**பதிப்பாசிரியர்:** ருக்கி ப்ரணாந்து

**தமிழாக்கம்:** எஸ். சிவகுருநாதன், என்தனி வினோத்

**ஆதார வாசிப்பு:** என்தனி வினோத்

**பக்க வடிவமைப்பு அட்டைப்படம், அச்சு:**

adARTS
If you can imagine it, we can create it.

இல. 111/1/1, பழைய வீதி, நாவீன்ன, மஹரகம.
தொலை பேசி: 011 310 31 81

**வெளியீடு:**

**Right to Life Human Rights Centre**
இல.555, கொழும்பு வீதி, குறனை, கட்டுநாயக்க
தொலை பேசி: 031 222 1604, 031 223 1969
ஃபக்ஸ் : 031 223 1969
மின்னஞ்சல் : right2lifelk@gmail.com
இணையதளம்: www.right2lifelanka.org, www.aithiya.lk

Supported by a grant from the
**"Open Society Foundations"**

# அறிமுகம்

உலகில் வாழும் அனைத்து பிரஜைகளினதும் பன்மைத்துவ உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இரண்டு பொறிமுறைகள் அமைக்கப்பட்டுள்ளன. எமது நாட்டைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளுடன் ஒப்புநோக்கும்போது இவற்றுள் மிகச் சக்திவாய்ந்த பொறிமுறை சர்வதேச ரீதியாக அமைக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பொறிமுறையாகும். ஆனால், ஒரேமுறையில் இல்லாதுவிடினும் படிப்படியாக இவ்வாறாக சர்வதேச ரீதியில் அமைக்கப்பட்டுள்ள உரிமைகளைப் பாதுகாக்கும் பொறிமுறைகளைத் தமது நாட்டிலும் செயற்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகளின் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள நாடுகள் பொதுவான இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம், பொருளாதார - சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம், பெண்கள் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம், சிறுவர் உரிமைகள் பற்றிய சர்வதேச சமவாயம், அனைத்து வகையான இனப் பாரபட்சங்களைப் புறக்கணிப்பதற்கான சர்வதேச சமவாயம், சித்திரவதைகள் மற்றும் ஏனைய குரூர, மனிதத் தன்மையற்ற அல்லது பாரபட்சமான கவனிப்புக்கு அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம், புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை பாதுகாக்கும் சமவாயம், வலது குறைந்தோரின் உரிமை பற்றிய சமவாயம் மற்றும் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட அனைத்து வகையான காணாமற்போதல்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய சர்வதேசச் சமவாயம், உட்பட பல சமவாயங்களின் பங்குதாரராக, இலங்கை கைச்சாத்திட்டுள்ளது.

இவ்வாறாக சர்வதேச ரீதியாக கைச்சாத்திடப்பட்டு மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட சமவாயங்கள் அல்லது அவற்றில் உள்ளடக்கப்பட்ட பகுதிகளை சில நாடுகள் தமது உள்நாட்டு சட்டத்தொகுதியில் உள்ளடக்கியுள்ளன. இலங்கையும் அவ்வாறு நடவடிக்கை எடுத்த ஒரு நாடாகும். 1994 ஆம் ஆண்டில் சித்திரவதை மற்றும் ஏனைய குரூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது அவமானத்திற்குரிய கவனிப்புக்கள் அல்லது தண்டனைகள் என்பவற்றிற்கு எதிரான சமவாயம் விசேட சட்டத்தின்மூலம்

உள்நாட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சித்திரவதை இலங்கையில் அடிப்படை உரிமை மீறலாகக் கருதப்பட்டாலும், இச்சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர், சித்திரவதை ஒரு குற்றவியல் குற்றமாகக் கருதப்படுகிறது. 2007, இலங்கையில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சட்டம் கொண்டுவரப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்குமான சர்வதேச நிகழ்ச்சித்திட்டத்தின் பங்காளர்களான பின்னர், இதுவரை பங்குதாரராகி மற்றும் உறுதிப்பத்தப்பட்ட சமவாயங்களுக்கும், சாசனங்களுக்கும் ஏற்புடைய விசேட குழுக்கள் மூலம் தமது நாட்டின் மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்காக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பிப்பதை அங்கத்துவ நாடுகள் செயற்படுத்த வேண்டும்.

அரச மற்றும் ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களும், தனிப்பட்ட முறையில் அல்லது ஸ்தாபன ரீதியாக, குழுக்கள் அந்தந்த நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் பற்றிய சுயாதீனமான அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறாக சமர்ப்பிக்கப்படும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அறிக்கைகள், மூலம் பெறும் தகவல்களுடன் பங்குதாரர்களாக உள்ள அரசுகள் ஏற்புடைய சர்வதேச சமவாயங்களுக்கமைய நடைமுறையில் செயற்படுவதற்கு ஏற்புடைய பரிந்துரைகளை அந்தந்த குழுக்கள் மூலம் அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்படுகின்றன. அதே சமயம், மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் வழிமுறையும் இடையிடையே அவதானிப்புக்கு உட்படுத்தப்படும்.

இவ்வாறாக ஐக்கிய நாடுகளின் சித்திரவதைக் குழுவும் தமது பங்காளர் நாடுகளால் சித்திரவதை மற்றும் வேறு வகையான குரூரங்கள், மனிதத் தன்மையற்ற அல்லது அவமானத்திற்குரிய கவனிப்பிற்கு அல்லது தண்டனைக்கு எதிரான, சர்வதேச சமவாயத்திற்கமைய செயற்பட்டுள்ள முறையை அவதானிப்பதற்கு ஜெனீவா நகரத்தில் ஒன்றுகூடுகின்றனர்.

2011 இல் இருந்து சுபைாவ வழ டுகைந ர்ரஅயெ சுபைாவள ஊநவெசந அமைப்பும் ஏனைய ஒன்பது சகோதர அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து மேற்படி குழுவிற்காக இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பாக மாற்று அறிக்கையொன்று சித்திரவதைக்கு எதிரான குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் குழு வழங்கிய பரிந்துரைகள் நாட்டில் செயற்படுத்தப்பட்ட முறைமையை அவதானித்து, 2016 ஆம் வருடத்தில் மற்றுமோர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதன்பொருட்டு 20 அமைப்புக்கள் பங்களிப்புச் செய்தன. அதேசமயம், மற்றுமொரு முக்கியமான மாற்று அறிக்கையொன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினாலும் 2016 ஆம் ஆண்டில் மேற்படி குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அரச மற்றும் அரச சார்பற்ற அனைத்து துறைகளாலும் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அறிக்கைகளும், சித்திரவதைக்குழுப் பிரதிநிதிகள் அதற்கு முன்னர் மேற்கொண்ட அவதானிப்பு விஜயங்களின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அரசு, சர்வதேச சமூகத்திற்கு உறுதிமொழி அளித்தவகையில், இலங்கையில் சித்திரவதையைத் தடுத்து நிறுத்துவதற்கான மிக முக்கியமான நடவடிக்கைகளை பரிந்துரைகளாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளில் இப்பொறிமுறைகள் செயற்படும் முறைமை பற்றியும், அவை ஏற்கனவே வழங்கியுள்ள பரிந்துரைகள் பற்றியும், ஓர் அடிப்படைப் புரிதலை வழங்கும் குறிக்கோளுடன் இப்பிரசுரம் உங்களுக்கு வழங்கப்படுகிறது.

# அத்தியாயம்

பக்கம்


| | | |
|---|---|---|
| 01. | சித்திரவதைக்கு எதிரான குழுவினால் இலங்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள் | 9 - 15 |
| 02. | மனித உரிமைகள் பற்றிய பொறிமுறை | 16 - 18 |
| 03. | ஐக்கிய நாடுகளின் அமைப்பு | 19 - 20 |
| 04. | ஐக்கிய நாடுகளில் மனித உரிமைகள் பேரவை | 21 - 25 |
| 05. | சுமவாயங்கள் அடிப்படையில் பொறிமுறைகள் | 26 - 31 |
| 06. | சித்திரவதைக்கு எதிரான சமவாயத்துடன் இலங்கைக்குள்ள தொடர்பு | 32 - 36 |
| 07. | 1994 இன் 22 ஆம் இலக்க சித்திரவதைக்கு எதிரான சமவாயச்சட்டம் | 37 - 38 |
| 08. | மனித உரிமைகள் பற்றிய உயர் ஆணையர் பணியகம் | 39 |

- இலங்கை சித்திரவதைக்கும் ஏனைய குரூரமான, மனிதத் தன்மையற்ற அல்லது அவமானத்திற்குரிய கவனிப்பிற்கு அல்லது தண்டனைக்கு எதிரான சர்வதேச சமவாயத்தின் பங்காளர் நாடாகியமையால் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்படி சமவாயத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சித்திரவதைக்கு எதிரான கமிட்டிக்கு மேற்படி சமவாயத்திற்கு ஏற்புடைய தமது அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.
- பின்னர், மேற்படி அறிக்கையும், கமிட்டி பெறும் வேறு அறிக்கைகளையும் ஆய்வுசெய்து பின்னர் கமிட்டியினால் அரசுகளுக்கு ஏற்புடைய பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும்.
- இலங்கை 2016 ஆம் ஆண்டில் இக்கமிட்டியிடம் தனது அறிக்கையை சமர்ப்பித்ததோடு, கமிட்டி பின்வரும் பரிந்துரைகளை 2017 இல் இலங்கைக்கு சமர்ப்பித்துள்ளது.

## 01. சித்திரவதைக்கு எதிரான கமிட்டியினால் இலங்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகள்

பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலஎல்லையுள் அடிக்கடி மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள்

- நீதிமன்றத்தினால் விநியோகிக்கப்பட்ட அழைப்பாணையின்றி மேற்கொள்ளப்படும் கைதுகள்பற்றி ஏற்புடைய வகையில் சட்ட ரீதியான திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- தடுத்து வைக்கப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட நபர்களைக் குறித்துரைக்கப்பட்ட காலஎல்லைக்குள் உரிய நீதிமன்றத்தின் நீதிபதிமுன் ஆஜர்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
- கைதுசெய்யும் உத்தியோகத்தர்களால் கைதுசெய்யப்படும் நபர்கள் அல்லது தடுத்து வைக்கப்படும் நபர்கள்பற்றிய விபரங்களை உள்ளடக்கிய திகதி, நேரம், தடுத்து வைப்பதற்கான காரணி மற்றும் கைதுசெய்யப்பட்ட இடம் என்பன பற்றிய விபரங்களைப் பதிவுசெய்வதை உறுதிசெய்தல்.

- மேற்படி தடுத்து வைப்புகளைப் பற்றிய பதிவு விபரங்களை மேற்பார்வை செய்வதும் அவற்றை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.

- ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெறும் போது ஏற்படக்கூடிய பொலிஸ் நடவடிக்கைகள்பற்றி அவதானமாக இருத்தல் மற்றும் விசாரணைக்காக புதிய குற்றவியல் ஆய்வு முறைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.

- ஓர் சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் காலஎல்லையுள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக ஓர் நீதிபதி நியாயமாக நம்புவாரேயாயின், அதுபற்றி மேற்படி தடுத்து வைக்கப்பட்டவரை விசாரிப்பதும், அவரை சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல். இது தொடர்பாக எதுவித பிரதிபலிப்பையும் காட்டாமல் தனது கடமையைப் புறக்கணக்கும் நீதிபதிகள் பற்றி அரசு தரப்பு பொறுப்புக்கூற வேண்டும்.

- தனிநபர்களைத் தடுத்து வைக்கப்படும் அமைவிடங்களில் கண்காணிப்பு கமெராக்களைப் பொருத்துதல். இந்த தரவுகளுக்கு பிரவேசிக்கும் உரிமையை ஆய்வாளர்களுக்கும், தடுத்து வைக்கப்பட்டோருக்கும் சட்டத்தரணிகளுக்கும் அனுமதி வழங்குதல்.

வெள்ளை வான்கள்மூலம் மேற்கொள்ளப்பட்ட கடத்தல்கள்

- 2002 - 2011 ஆகிய காலகட்டத்தில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள்பற்றிய ஆணையாளர் அலுவலகத்தின் (OHCHR) அறிக்கை மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் அறிக்கைகளுக்கமைய அடையாளம் காணப்பட்ட 48 அமைவிடங்கள், சித்திரவதைகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட அமைவிடங்கள் மற்றும் சித்திரவதை மத்திய நிலையங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர் தடுத்து வைக்கப்பட்ட மத்திய நிலையங்களாக 2009 - 2015 வரையிலான காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவ்வாறு தடுத்து வைக்கப்பட்ட, தடுத்துவைத்து குரூரமான முறையில் சித்திரவதைக்கு ஆளான, பாலியல் உறுப்புக்கள்மீது சித்திரவதை செய்யப்பட்ட அனேகமான நபர்கள் விடுதலைப்புலி சந்தேக நபர்களாவர்.

- தனிநபர்களை சட்டவிரோதமான முறையில் தடுத்து வைத்தல், சித்திரவதைகளுக்கு ஆளாக்குதல், பாலியல் சித்திரவதைகளுக்கு ஆளாக்குதல் என்பனபற்றி சுயாதீனமான ஒரு நிறுவனத்தின்மூலம் நியாயமான, பக்கச்சார்பற்ற மற்றும் செயல்திறன்கொண்ட ஆய்வினை நடத்துவதாக அரச தரப்பு உறுதிசெய்ய வேண்டும்.

- தடுத்து வைக்கும் முகாம்களை அரச வர்த்தமானியில் பகிரங்கப்படுத்துதல், உத்தியோகபூர்வமற்ற தடுப்பு முகாம்களை மூடிவிடுதல் மற்றும் உத்தியோகப் பற்றற்ற தடுப்பு நிலையங்களை மூடிவிடுதல் மற்றும் உத்தியோகபூர்வமற்ற முறையில் எந்தவொரு நபரையும் தடுத்து வைக்கவில்லையென அரச தரப்பு உறுதிசெய்ய வேண்டும்.

பாதுகாப்பு துறைகளின் நிறுவன ரீதியான மறுசீரமைப்புக்கள்

- மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்டதாக நியாயமான காரணங்களை முன்வைத்து நம்பிக்கை வைக்கக்கூடிய மேல்மட்ட அல்லது கீழ்மட்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களைப் பாதுகாக்கக்கூடிய பிரிவுகளையும், இராணுவ படையணிகளையும் இல்லாதொழித்தல்.

- சித்திரவதைகள் தொடர்பான குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்குப் பொறுப்பான கடமையாற்றிய முன்னைநாள் பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. சிசிர மெண்டிஸ் அவர்களின் நடவடிக்கைகளையும் மேற்படி சித்திரவதைகளுடன் அவருக்கிருந்த தொடர்புபற்றியும் அறிக்கையிடுதல்.

முன்னர் இடம்பெற்ற சித்திரவதைகள் மற்றும் காணாமல் ஆக்குதல்பற்றிய வகைப்பொறுப்பை உறுதிசெய்தல்

- சித்திரவதைகள், காணாமல் ஆக்குதல் மற்றும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் என்பனபற்றி விசாரணை செய்வதற்கு விசேட நீதிமன்ற நடவடிக்கைகளை ஸ்தாபித்தல். இத்தகைய விடயங்களை ஆய்வுசெய்வதற்கு சுயாதீனமான, வினைத்திறன் கொண்ட விசேட நிறுவனங்களை அமைத்தல். மேற்படி நடவடிக்கைகளுக்காக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சுயாதீனமான, பக்கச் சார்பற்ற நபர்களை நியமித்தல் வேண்டும்.

- மோதல்கள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் மற்றும் யுத்தத்திற்குப் பின்னர் இடம்பெற்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள்பற்றியும் இடம்பெறும் குற்றவியல் குற்றங்கள் பற்றிய விசாரணைகளையும் அரசு வரைபடமாக்கல் வேண்டும். மேற்படி நடவடிக்கைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டிய, அவற்றிற்கு ஆணையிட்ட நபர்கள் மற்றும் உயர்உத்தியோகத்தர்கள் பற்றி சுயாதீனமான விசாரணையொன்று நடத்தி உண்மையை நிலைநாட்ட வேண்டும்.

சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட பாதிக்கப்பட்டோரும் சாட்சிக்காரர்களும்

- அரச தரப்பினரால், சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட பாதிக்கப்பட்டோர் தனிமனித சுதந்திரத்தை இழந்தவர்கள் என்ற வகையில் அவர்களுடைய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக சுயாதீனமான, செயல்திறன் கொண்ட, அந்தரங்கமான வழிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

- மேற்படி முறைப்பாட்டாளர்களின் பாதுகாப்பும் அவர்கள் பலிவாங்கலுக்கு ஆளாகாத வகையில் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

- பாதிக்கப்பட்டோரையும், சாட்சிக்காரர்களையும் பாதுகாக்கும் சட்டத்தின்மூலம் குறித்துரைக்கப்பட்ட தனிநபர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- பாதிக்கப்பட்டோரையும் சாட்சிக்காரர்களையும் பொலிஸ் பிரிவிற்கு அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களை நியமித்தல். மேற்படி பிரிவின் பதவிநிலைக்குரிய படிநிலை உயர் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடையீடு இல்லாத முறையில் சுயாதீனமாக செயற்பட வேண்டும்.

- அதிகாரிகளுக்கு எதிராக சித்திரவதைகள் தொடர்பான ஆய்வு நடவடிக்கைகள் இடம்பெறும்போது, மேற்படி நபர்களின் சேவை மிகத் துரிதமாக இடைநிறுத்துவது அரசின் பொறுப்பாகும்.

- சித்திரவதைக்கு ஆளான பாதிக்கப்பட்டோருக்கு தகுதியான சிகிச்சைகளைப் பெறக்கூடிய வகையில், அவர்களை மீள ஸ்தாபிக்கக்கூடிய வகையில் போதியளவு நஷ்டஈடு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு தொடர்பாக தகுதியான சட்டம் மற்றும் நிர்வாக திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

பயங்கரவாதத் தடைச்சட்டம்

- பயங்கரவாதத் தடைச்சட்டத்திற்கு போதியளவு சட்டத் திருத்தங்களை முன்வைத்தல்.

- இச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் பற்றி நீதவான்கள் அடிக்கடி அவதானித்தல் வேண்டும். அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் துரிதமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

- சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொண்ட, தரநியமங்களுக்கமைய, தடுத்து வைக்கப்பட்டோரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும். தடுப்பு நிலையங்கள் பற்றி காலத்திற்கு காலம் பகுப்பாய்வு செய்தல் அரச தரப்பினரின் பொறுப்பாகும்.

- அனைத்து தடுத்து வைக்கப்பட்டோரினதும் அடிப்படை உரிமைகள் சட்டரீதியான பாதுகாப்புக்கு உரித்துடையவாறு, இத்தகைய குற்றவியல் வழக்கு கட்டளைச்சட்டம் போதியளவு திருத்தப்பட வேண்டும்.

- மேற்கண்டவாறு திருத்தப்பட வேண்டிய துறைகள் பின்வருமாறு இடம்பெற வேண்டும்.

- சட்ட உதவிகளை வழங்குதல் விசேடமாக, விசாரணக்கு உட்படுத்தப்படும்போது இந்த சட்டத்தரணிகளின் உதவி வழங்கப்பட வேண்டும்.

- தடுத்து வைக்கப்பட்டோரின் நெருங்கிய உறவினருக்கு அந்நபர் ஏன் தடுத்து வைக்கப்பட்டுளளார் என்பதையும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அமைவிடத்தையும் அறிவித்தல் வேண்டும்.

- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை பற்றி கேள்விக்குட்படுத்தப்பட முடியும்.

வைத்திய பரிசோதனை

- ஒரு தனிநபரின் சுதந்திரத்தை மறுப்பதற்கு முன்னர், அவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துதல், அதற்கு தடுத்துவைக்கப்பட்டவரின் விருப்பத்திற்கமைய வைத்தியர்களை தெரிவுசெய்யக்கூடியதாக அமைய வேண்டும். அல்லது சுயாதீன வைத்தியர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

- சட்ட வைத்திய அறிக்கை, நேரடியாகவே தடுத்து வைக்கப்பட்டவர் அல்லது அவரது சட்டத்தரணி பெறக்கூடியமை.

- இச்சகல விசாரணைகளும் பொலிஸ் உத்தியோகத்தரின் அல்லது சிறைச்சாலை அதிகாரிகளின் முன்னிலையில் மேற்கொள்ளக் கூடாது.

- ஒரு தனிநபர் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டதாக வைத்தியர் ஒருவர் அடையாளம் கண்டால், வைத்தியருக்கு அதுபற்றி அந்தரங்கமாக சுயாதீன நிறுவனம் ஒன்றிற்கு முறைப்பாடு செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல்

- வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல் குற்றவியல் குற்றமாகுமென குற்றவியல் தண்டனைக் கோவைச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

- சித்திரவதைகளையும் வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்தல் பற்றிய சுயாதீனமான பொறிமுறை ஒன்றின்மூலம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- காணாமல் ஆக்கப்பட்ட நபர்களுக்கான அலுவலகத்தை தொலைநுட்ப ரீதியில் மேம்படுத்துதல்.

- ஒரு தனிநபர் காணாமல் ஆக்கப்பட்டமை பற்றி நேரடியாகவே தாக்கத்தை ஏற்படுத்தும் பாதிக்கப்பட்டோருக்கு போதியளவு இழப்பீடு வழங்குதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான உளவியல் சமூக நிதிசார் ஒத்துழைப்பை வழங்குதல்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

- அரச தரப்பு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு போதியளவு வளங்களையும் பதவி அணியினரையும் வழங்க வேண்டும்.

- அரச தரப்பினரால் கைதுசெய்யப்படும் மற்றும் தடுத்து வைக்கப்படும் முகாம்களில் இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு தகவல்கள் வழங்கக்கூடிய சட்டரீதியான பொறுப்பை ஸ்தாபித்தல் வேண்டும்.

- மனித உரிமைகள் ஆணைக்குழு நேரடியாகவே நீதிமன்றம் முன்னே வழக்குகளைத் தொடரக்கூடிய அதிகாரத்தை வழங்கும் வகையில் சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கைது செய்யப்பட்டோர் கொலைசெய்யப்படுதல்

- நிமல் சந்திரசிறி தசநாயக்க மற்றும் பீ.எச்.சந்துன்மாலிங்க ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கையில் கொலையுண்டமைபற்றி, கைதுசெய்யப்பட்டபோது குறித்துரைக்கப்பட்ட நிறுவனமும் மேற்படி நிறுவனங்களினதும் அத்தகைய நிறுவனங்களின் உயர் அதிகாரிகளினது இடையீடு இன்றி சுயாதீன விசாரணைத்துறையின் நியாயமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

- கொலை இடம்பெற்ற பிரதேசத்தைத் தவிர்த்து வேறு பிரதேசத்தில் மரணத்திற்குப் பின்னரான விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

வலுக்கட்டாயமாக குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறுதல்

- சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு பதிவு செய்யப்படும் குற்ற ஒப்புதல் என உறுதி செய்யப்பட்டால், வழக்கில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அதேவகையில் நிலவும் என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அத்தகைய உறுதிப்பாட்டின்போது மேற்படி நபரை இயன்றளவு துரிதமாக சட்டவைத்தியப் பரிசோனைக்கு உட்படுத்த வேண்டும்.

- இந்த சகல நடைமுறைகளின் இடையே குற்றம் சுமத்தப்பட்டவர் ஒருமொழிபெயர்ப்பாளரின் உதவியைப் பெறுவதற்கான உரிமை சட்ட திருத்தத்தின்மூலம் உத்தரவாதம் செய்யப்பட வேண்டும்.

(இப் பரிந்துரைகள் கீழ் காணும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் -https://documents-dds-ny.un.org/doc/UNDOC/GEN/G17/020/09/PDF/G1702009.pdf?OpenElement)

- ❖ இப்பரிந்துரைகளின் ஆரம்பம் எங்கே என நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அதற்காக,

- ❖ சித்திரவதைக்கு எதிரான குழு என்றால் என்ன?
- ❖ மேற்படி குழுவிற்கும் எமது நாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்பு யாது? இந்த விடயங்கள்பற்றி கண்டறிய வேண்டும்.
- ❖ சித்திரவதைக்கு எதிரான குழு என்பது ஒரு வகையான மனித உரிமைகளைப் பேணும் பொறிமுறையாகும். இப்படிக் கூறும்போது ஒரேமுறையில் புரியாத காரணத்தினால் நாம் இதுபற்றி மேலும் ஆராய்வோம்.

## 02. மனித உரிமைகள் பொறிமுறை என்றால் (Human Rights Mechanism)

- குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டு மக்களின் மனித உரிமை மீறல்கள்பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதாயின்,
- அந்த குறித்துரைக்கப்பட்ட நாட்டின் மனித உரிமை நிலைமைகளைப்பற்றி கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல்,
- அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையாகும்.

இவ்வகையான மூன்று பொறிமுறைகள் இருக்கின்றன. அவை யாவை?




அவ்வாறாயின் உள்நாட்டு பொறிமுறை என்றால்

- அந்தந்த நாடுகளில் அமைந்துள்ள மனித உரிமை பொறிமுறைகள்.
- சர்வதேச சட்டத்தின்கீழ் மனித உரிமைகளைப் பேணுவதற்கான கோட்பாடுகள் மற்றும் வழிமுறைகள் இருந்தபோதிலும், மிகப் பயனுறுதியுள்ள பொறிமுறையாகும்.
- எமது நாட்டிலாயின்,

➢ அடிப்படை உரிமைகள் மீறப்படுவதையிட்டு மனுக்களை விசாரணை செய்யும் உயர்நீதிமன்றம்

- ➢ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும்
- ➢ ஒம்புட்ஸ்மன் (குறைகேள் அதிகாரி அல்லது நிருவாக நடவடிக்கைகளுக்கான பாராளுமன்ற் ஆணையாளர்)
- ➢ 1994 இன் 22 ஆம் இலக்க சித்திரவதைக்கு எதிரான சமவாயச்சட்டம்

உள்நாட்டுப் பொறிமுறையாகும்.

பிராந்திய பொறிமுறை என்றால் என்ன?

- ■ நாடுகளின் மனித உரிமை மீறல்கள் பற்றிய முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கும், மேற்படி நாடுகளில் மனித உரிமை நிலைமைகளைப்பற்றி அவதானிப்பதற்கும் பிராந்திய ரீதியில் உருவாக்கப்பட்ட பொறிமுறைகள்.

- ➢ மனித உரிமைகள் பற்றிய ஐரோப்பிய சமவாயம் (European Convention on Human Rights).
- ➢ மனித மற்றும் தனிநபர் உரிமைகள் பற்றிய ஆபிரிக்க சாசனம் (African Charter on Human and People's Rights)
- ➢ மனித உரிமைகள் பற்றிய அமெரிக்காவிற்கிடையிலான ஆணைக்குழு (Inter-American Commission on Human Rights)
- ➢ மனித உரிமைகள் பற்றிய அமெரிக்காவிற்கிடையிலான நீதிமன்றம் (Inter-American Court of Human Rights)

என்பன பிராந்திய பொறிமுறைகளாகும்.

> உதாரணமாக, மனித உரிமைகளைப் பேணுவது பற்றிய ஐரோப்பிய சமவாயத்தில் குறித்துரைக்கப்படும் மனித உரிமைகள், மேற்படி சமவாயத்தின் பரப்பினரான ஓர் அரசு உரிமைகளை மீறினால், மேற்படி மனித உரிமை மீறப்பட்ட நபருக்கு மனித உரிமைகள் பற்றிய ஐரோப்பிய நீதிமன்றத்திற்கும் (European Court of Human Rights) தனது முறைப்பாட்டை சமர்ப்பிக்க முடியும்.

சர்வதேச பொறிமுறைகள் என்றால் என்ன?

- ■ நாடுகளின் மனித உரிமை நிலைமைகள் பற்றிய கண்காணிப்பு மற்றும் அறிக்கை செய்வதற்கு சர்வதேச ரீதியாக உருவாக்கப்பட்டுள்ள பொறிமுறைகள்.

இந்நூலின் மூலம், சர்வதேச மனித உரிமை பொறிமுறை பற்றி கலந்துரையாடப்படுகிறது. எனவே, ஐக்கிய நாடுகள் அமைப்பு முன்னணிப் பாத்திரம் வகிக்கும், கீழ்நோக்கிச் செயற்படும் மனித உரிமைகள் பொறிமுறை பற்றிய அடிப்படைப் புரிதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

# 03. நாம் நன்கு அறிந்த ஐக்கிய நாடுகள் அமைப்பு (United Nations)

- ஐக்கிய நாடுகளின் சாசனத்தைத் (ருே ஊாயசவநச) தயாரிப்பதற்கு 50 நாடுகளின் பிரதிநிதிகள் 1945 இல் அமெரிக்க நாட்டின் சென்பிரான்சிஸ்கோ நகரில் இடம்பெற்ற அனைத்து நாடுகளின் அமைப்பு பற்றிய ஐக்கிய நாடுகளின் மாநாட்டின்போது (ருவைநன யேவழைளெ ஊழகெநசநஉந ழெ ஐவெநசயெவழையெட ழுசபயெணையவழைெ) ஒன்று கூடின.

- 1945 யூன் 26 ஆந் திகதி மேற்படி 50 நாடுகளின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகளில் சாசனத்தில் கைச்சாத்திட்டன. மாநாட்டில் பங்குபற்றாத, போலந்து பின்னர் கையெழுத்திட்டு 51 ஆரம்ப உறுப்பு நாடுகளில் ஒன்றாக இணைந்து கொண்டது.

- கையொப்பமிட்டவர்களில் பெரும்பான்மையினர் 1945 ஒக்டோபர் 24 ஆந் திகதி ஐக்கிய நாடுகளின் சாசனத்தை வலுவாக்கம் செய்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் அமைப்பு உத்தியோகபூர்வமாக உருவாகியது.

- ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 24 ஆந் திகதி ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்படுகிறது.

- தற்போது ஐக்கிய நாடுகள் அமைப்பில் 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

- ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் நியூயோர்க் நகரத்தில் இதன் தலைமையகம் அமைந்துள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஆறு முக்கிய அமைப்புக்கள் உண்டு.

1. பொதுச்சபை (UN General Assembly)
2. பாதுகாப்புச்சபை (UN Security Council)
3. பொருளாதார சமூகப் பேரவை (UN Economic and Social Council)
4. ஐ.நா. நம்பிக்கைப் பொறுப்பாளர் பேரவை UN Trusteeship Council – இந்நிறுவனம் தற்போது செயலிழந்துள்ளது.
5. சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice)
6. ஐ.நா. செயலகம் (UN Secretariat)

- 2006 மார்ச் 15ம் திகதி ஐக்கிய நாடுகளின் சட்டப்பேரவையின் தீர்வு இலக்கம் 60/251 இன் கீழ் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (UN Human Rights Council) ஆரம்பிக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை மனித உரிமைகளை மேம்படுத்த மற்றும் பாதுகாக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவாகும்.
- ஆகவே மனித உரிமைகள் பேரவை பற்றி நாம் பார்ப்போம்.

# 04. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (UN Human Rights Council)

- ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 193 அங்கத்துவ நாடுகளில் இருந்து 47 அரசுகள் இப்பேரவையில் அங்கத்துவம் வகிக்கின்றன.

- இந்த 47 அரசுகள் 3 ஆண்டுகாலம் பதவி வகிக்கும்.

- பிராந்திய புவியியல் அடிப்படையில் இந்த உறுப்பு நாடுகள் தெரிவு செய்யப்படுகின்றன

  - ➢ இதற்கமைய பின்வருமாறு உலகின் பல்வேறு பிராந்தியங்களைச் சார்ந்த நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கின்றன.

| பிராந்தியம் | அரசுகளின் எண்ணிக்கை |
|---|---|
| ஆபிரிக்கா | 13 |
| ஆசியா | 13 |
| இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் நாடுகள் | 08 |
| மேற்கு ஐரோப்பா உட்பட ஏனைய நாடுகள் | 07 |
| கிழக்கு ஐரோப்பா | 06 |

- ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி, மார்ச் மற்றும் செப்டெம்பர் ஆகிய மாதங்களில் இங்கு கூட்ட அமர்வுகள் இடம்பெறும்.

- சமவாயங்கள், பிரகடனங்கள் என்பவற்றை வரைவது இதன் ஒரு கடமையாகும்.

- இப்பேரவை மனித உரிமைகள் பற்றிய விசேட நிபுணத்துவம் கொண்ட அமைப்பாகும்.
- இது உலகின் மிக பிரபலமான மனித உரிமைகள்பற்றிய கட்டமைப்பாகும்.

- ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் விசேட அமர்வுகள் நடைபெறும்.
- அவ்வாறான விசேட அமர்வுகள் ஏதேனும் ஒரு நாட்டில் மனித உரிமை தொடர்பாக அபாயகரமான நிலை காணப்படும் போது நடைபெறும்.
- வழமையான அமர்வுகள் வருமளவும் காத்திருக்காது வருடத்தின் எந்த காலப்பகுதியிலும் இவ்வாறான அமர்வுகளை முன்னெடுக்கலாம்.
- இதற்கு 47 பேர் கொண்ட அரசுகளின் குழுவில் 1/3 சம்மதம் அவசியம்.
- 2009 மே மாதம் 26 நடைபெற்ற 11வது விசேட அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் பற்றிய நிலை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

பேரவையின் அமர்வுகள்

- பேரவையின் அமர்வுகளில் பங்குபற்றுவோர்.
- அங்கத்துவ அரசுகள்
- பேரவையின் உறுப்பினர்கள் அல்லாத வேறு அரசுகள்
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் விசேட நிறுவனங்கள்
    - ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (United Nations Development Programme - UNDP)
    - ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் (United Nations International Children's Emergency Fund - UNICEF)

- சர்வதேச தொழிலாளர் நிறுவனம் (International Labour Organization – ILO)

- ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள்

- ஒவ்வொரு அரச தரப்பினரும் இந்த அமர்வுகளின்மூலம் தமது நாட்டில் நிலவும் மனித உரிமைகளைப்பற்றிய காரண காரியங்களை முன்வைத்தல் வேண்டும்.

- இதுபற்றி இடம்பெறும் விவாதங்களில் பொதுமக்கள் பங்குபற்ற முடியும்.

- இவ்விவாதங்களின் முடிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு நாட்டின் மனித உரிமைகள் நிலைமைகள் மிக மோசமாயின் இதன்போது மேற்படி நாடுகளில் நிலைமை விமர்சனத்திற்கு உட்படுத்தி பல்வேறு இணக்கப்பாடுகள் காணப்படும்.

- அதேசமயம் இத்தகைய நாடுகளின் நிலைமையை நல்ல மார்க்கத்திற்கு எடுப்பதற்கு அவசியமான பரிந்துரைகள் முன்வைக்கப்படும்.

- இதன் முக்கியத்துவம் என்னவென்றால் சர்வதேச ரீதியாக அபகீர்த்திக்கு ஆளாவதற்கு விரும்பாத அரசுகள் விரும்பாவிட்டாலும்கூட சிற்சில வளர்ச்சிப் போக்குகளை மனித உரிமைகள் துறையில் ஏற்படுத்தவதற்கு அந்நாடுகள் தூண்டப்படுகின்றன.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை விசேட நடைமுறைகள்:

- இந் நடைமுறையின் கீழ் மனித உரிமைகள் பற்றி அறிவுறுத்தவும், அறிக்கையிடவும் நாட்டிற்கோ அல்லது விசேட விடயம் மட்டில் சுயாதீன மனித உரிமை வல்லுனர்கள் நியமிக்கப்படுவர்.

- அவ்வாறான சுயாதீனமான குழுக்கள் இருவகைப்படுவர், விசேட அறிக்கையாளர்கள் (Special Rapporteurs) மற்றும் நடவடிக்கைக் குழு (Working Groups)

விசேட அறிக்கையாளர்கள் (Special Rapporteurs):

- நாடுகளில் மனித உரிமைகளை ஆய்வுசெய்வதற்கு பேரவை விசேட அறிக்கையாளர்களை நியமிக்கும்.

- இந்த அறிக்கையாளர்கள் பொதுவாக நாடுகளுக்கு ஏற்புடைய அல்லது குறித்துரைக்கப்பட வேண்டிய தொனிப்பொருட்களின்கீழ் நியமனம் பெறுகின்றனர்

- அவர்கள் மனித உரிமைகள்பற்றி விசேட அறிவுடைய நபர்களாவர்.

- தனிநபர்கள் என்ற வகையில் செயற்பட்டவாறு மனித உரிமைகள்பற்றிய விசேட நிலைமைகளை மேற்பார்வை செய்தல்.

- இவர்கள் தொண்டு அடிப்படையில் சேவைபுரிகின்றனர்.

- இவர்கள் ஐ.நா. அமைப்பின் பதவிநிலை, உத்தியோகத்தர்கள் அல்ல.

- தாம் செய்யும் பணிகளுக்கு அவர்கள் ஊதியம் வாங்குவது இல்லை.

- அவர்கள் எந்தவொரு அரசுக்கும் கடப்பாடு கொண்டிராத சுயாதீன நபர்களாவர்.

விசேட தொனிப்பொருட்களின் கீழ் நியமனம் பெறும் விசேட அறிக்கையாளர்கள்

- ❖ சித்திரவதை - நில்ஸ் மெல்சர்
- ❖ கல்வி - கிசோர்சிங்
- ❖ சுகாதாரம் - ஆனந் குரோவர்

நாடுகளுக்கு ஏற்புடைய வகையில் நியமிக்கப்பட்ட விசேட அறிக்கையாளர்கள்

- ❖ வடகொரியா - மர்சுக்கி தருமான்
- ❖ ஈரான் - அஹமட் சபீட்
- ❖ சிரியா - போலோ சர்ஜியோ பிங்கெயிரோ

- மனித உரிமைகள் பேரவையின் மூலம் விசேட தொனிப் பொருள்களுக்காக அல்லது பொதுவில் ஒரு நாட்டிற்கான நடவடிக்கைக் குழுவும் (Working Groups) நியமிக்கப்படும்.

- ஏதேச்சதிகாரமான முறையில் தடுத்து வைத்தல் மற்றும் வலுக்கட்டாயமாக காணாமற் போகச் செய்தல்கள் போன்ற நிலைமைபற்றி ஆய்வு செய்வதற்கு இத்தகைய நடவடிக்கைக் குழு நியமிக்கப்படுகிறது.

- விசேட அறிக்கையாளர்கள் நாடுகளுக்கு விஜயம் செய்து அரச அதிகாரிகளை, நீதிமன்ற அதிகாரிகள், இராணுவத் தளபதிகள், சட்டதரணி, பாதிக்கப்பட்டவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவர்.
- தனிநபர்கள் முறைபாடுகளை கொடுக்குமிடத்து அவற்றை பெற்றுக் கொள்வர்.
- இம்முறைப்பாடுகள் பற்றி அரசிடம் விசாரித்தல்.
- பின்பு, அந்த முறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கைக் குழு மார்க்கமாக வழியாக பரிந்துரைகளை முன்வைப்பர்.

- மனித உரிமைகள் பேரவை மற்றும் விசேட நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களினால் உருவாக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகளின் அமைப்பு, ஐக்கிய நாடுகளின் சாசனத்திற்கமைய உருவாக்கப்பட்டது.
- எனவே இப்பொறிமுறை சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொறிமுறைகளென (Charter Based Mechanisms) அறிமுகப்படுத்தப்படும்.

(இது பற்றி மேலதிக விபரங்களை கீழ்காணும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம் - http://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/HRCIndex.aspx)

## 05. சமவாயங்கள் அடிப்படையில் பொறிமுறைகள்

- ❖ இதற்கு மேலதிகமாக, சர்வதேச மனித உரிமைகள் பொறிமுறையின்கீழ், சமவாயங்களை அடிப்படையாகக் கொண்ட பொறிமுறைகளும் (ஊழளெநவெழை டீயளநன ஆநஉாயளைஅள) இருக்கின்றன.
- ❖ இவற்றின் விசேடத் தன்மை, ஐக்கிய நாடுகள் அமைப்பின்மூலம் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு மனித உரிமைகளைப்பற்றிய சமவாயங்களின் ஊடாக ஏற்படுத்தப்பட்டுள்ள பொறிமுறைகளாகும்.
- ❖ இச்சமவாயங்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட பொறிமுறைகள் பொதுவாக மனித உரிமைகளைப்பற்றி ஆய்வு செய்யவில்லை.
- ❖ ஆனால் ஏற்புடைய சமவாயங்களின் மூலம் விசேடமாக உறுதிப்படுத்தப்பட்ட, மனித உரிமைத் துறையின செயற்பாடுகளை உலகளாவிய மட்டத்தில் ஆராய்தல் இப்பொறிமுறையின்மூலம் செயற்படுத்தப்படுகிறது.

■ மனித உரிமைகள்பற்றிய 9 சமவாயங்களை அடிப்படையாகக் கொண்ட பொறிமுறைகள் உருவாக்கப்பட்டன.

1. பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள்பற்றிய தேசிய கட்டுறுத்து (International Covenant on Economic, Social and Cultural Rights)

2. சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்பற்றிய தேசிய கட்டுறுத்து (International Covenant on Civil and Political Rights)

3. அனைத்து வகையான இனத்துவ பாரபட்சங்களைப் புறக்கணிக்கும் சர்வதேச சமவாயம். (International Convention for the Elimination of all Forms Racial Discrimination)

4. சித்திர வதைகள் ஏனைய மனிதநேயமற்ற அல்லது அவசமானத்திற்குரிய கவனிப்புக்கள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாயம். (Convention against Torture and Other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment)

5. பெண்களுக்கு எதிராக இடம்பெறும் அனைத்து வகையான பாரபட்சங்களையும் புறக்கணிக்கும் சமவாயம் (Convention on the Elimination of All Forms of Discrimination against Women)

6. சிறுவர் உரிமைகளைப்பற்றிய சமவாயம் (Convention on the Rights of the Child)

7. புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை பாதுகாக்கும் சமவாயம் (Convention on the Protection of the Rights of All Migrant workers and Members of their Families)

8. வலது குறைந்தோரின் உரிமை பற்றிய சமவாயம் (International Convention on the Rights of Persons with Disablities)

9. அனைத்து வகையான காணாமற்போதல்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய சர்வதேசச் சமவாயம் (International Convention for the Protection of All Persons from Enforced Disappearance)

- சுயாதீனமான நிபுணர்களை உள்ளடக்கிய குழுவின்மூலம் இச்சமவாயங்களின் பங்காளர்களாகிய, அரச தரப்பினர் மேற்படி சமவாயத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்ட திட்டவட்டமான மனித உரிமைத் துறை தமது நாட்டில் செயற்படுத்தப்படும் முறைபற்றிய அவதானிப்புகளை மேற்கொள்ளும்.

- இந்த ஒவ்வொரு சமவாயத்திற்கும் ஒவ்வொரு வேறுபட்ட 9 குழுக்கள் உண்டு.

- மேற்படி குழு உறுப்பினர்கள் ஏற்புடைய சமவாயத்தின் பங்காளர்களாகிய அரச தரப்பினர் மத்தியில் இருந்து தெரிவுசெய்யப்படுவார்கள்.

- ஆனால், இவர்கள் அந்த அரசுகளினால் தெரிவு செய்யப்படுவதில்லை.

அறிக்கைகளின் கவனயீர்ப்பு:

- இச்சமவாயங்களின்மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளை செயற்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் நடவடிக்கைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அனுபவிப்பது தொடர்பாக மேற்படி அரசு தரப்பு அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய அறிக்கைகள் அரச தரப்பினரால் காலத்திற்கு ஏற்புடைய வகையில் இக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு உறுதிமொழி அளிக்கப்படுகிறது.

- அரச தரப்பினர் ஏற்புடைய சமவாயங்களின்மூலம் அங்கீகரித்துள்ள கால எல்லையினுள் இந்த அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.

- இந்த அறிக்கைகளைப் பெறுவது தொடர்பாக ஏற்புடைய குழுவிற்கு முக்கிய பணிபொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- சமவாயத்தைக் உறுதிப்படுத்தப்பட்ட ஆரம்பக் காலகட்டத்தில் அரச தரப்பினர் மிகச்குறுகிய அறிக்கைகளையே சமர்ப்பித்துள்ளனர்.

- ஆனால் மேற்படி அறிக்கைகள் தகைமையற்றவையாக இருந்தபடியால் குழு நீண்ட விபரமான அறிக்கைகளை எதிர்பார்க்கின்றது.

- குழு ஏற்புடைய அரசுகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டமையால், அங்கு முழுமையான தகவல்களை சமர்ப்பிப்பது முக்கியமாக அமைந்தது.

- இந்த அறிக்கைகளில் ஏற்புடைய சமவாயத்தின் ஒவ்வொரு வாசகத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட உரிமைகள்பற்றிய தனித்தனி நாடுகளில் நிலவும் நிலைமை விபரிக்கப்பட வேண்டும்.

பொருளாதார, சமூகம் மற்றும் கலாசார உரிமைகள்பற்றிய சர்வதேச சமவாயத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள குழு (Committee on Economic, Social and Cultural Rights)

- 18 உறுப்பினர்களைக் குழு கொண்டிருக்கும்.
- சமவாயத்தின் ஒரு தரப்பினர் ஒரு வருடத்தில் இருந்து 2 வருடங்களுக்கு உட்பட்ட காலத்தில்,
- பின்னர், தோன்றும் ஒவ்வொரு 05 வருடத்திற்கும் ஒருமுறை
- தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்பற்றிய சர்வதேச சமவாயத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள குழு மனித உரிமைகள் கமிட்டி (Human Rights Committee) என அழைக்கப்படுகிறது.

- ❖ இக்கமிட்டியில் 18 உறுப்பினர்கள் உள்ளடக்கப்படுவர்.
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டு முதல் ஓர் ஆண்டுக்குள்,
- ❖ பின்னர், தோன்றும் ஒவ்வொரு 05 வருடத்திற்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சகலவிதமான இனத்துவ பாரபட்சங்களைப் புறக்கணிக்கும் சர்வதேச சமவாயத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி (Committee on the Elimination of all Forms of Racial Discrimination)

- ❖ இக்கமிட்டியில் 18 உறுப்பினர்கள் உள்ளடக்கப்படுவர்.
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டு முதல் ஓர் ஆண்டுக்குள்,
- ❖ பின்னர், தோன்றும் ஒவ்வொரு 02 வருடத்திற்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சித்திரவதை மற்றும் ஏனைய குரூர, மனிதநேயமற்ற மற்றும் அவமானத்திற்குரிய கவனிப்புகள் அல்லர்து தண்டனைக்கெதிரான சமவாயத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி (Committee against Torture and Other Cruel, Inhuman and Degrading Treatment)

- ❖ கமிட்டி 10 உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டில் இருந்து ஓராண்டிற்குள்,
- ❖ பின்னர் தோன்றும் ஒவ்வொரு 04 ஆண்டுகளுக்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

பெண்களுக்கெதிரான அனைத்து வகையான பாரபட்சங்களையும் புறக்கணிக்கும் சமவாயத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி (Committee on the Elimination of Discrimination against Women)

- ❖ இக்கமிட்டி 23 உறுப்பினர்களை உள்ளடக்கியது
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டில் இருந்து ஓராண்டிற்குள்,
- ❖ பின்னர் தோன்றும் ஒவ்வொரு 04 ஆண்டுகளுக்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களை பாதுகாக்கும் சமவாயதிதின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி (Committee on Migrant workers)

- ❖ இக்கமிட்டி 14 உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டில் இருந்து ஓர் ஆண்டுகளுக்குள்,
- ❖ பின்னர் தோன்றும் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

வலது குறைந்தோரின் உரிமை பற்றிய சமவாயதிதின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி (Committee on the Rights of Persons with Disablities)

- ❖ இக்கமிட்டி 18 உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்குள்,
- ❖ பின்னர் தோன்றும் ஒவ்வொரு 04 ஆண்டுகளுக்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

அனைத்து வகையான காணாமற்போதல்களில் இருந்து பாதுகாக்க வேண்டிய சர்வதேசச சமவாயதிதின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கமிட்டி (Committee on Enforced Disappearance)

- ❖ இக்கமிட்டி 10 உறுப்பினர்களை உள்ளடக்கியது.
- ❖ சமவாயத்தின் பங்குதாரராகிய ஆண்டில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்குள்,
- ❖ பின்னர் தோன்றும் ஒவ்வொரு 02 ஆண்டுகளுக்கும் ஒருமுறை,
- ❖ தமது அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

சித்திரவதை மற்றும் வேறு குரூர, மனிதத் தன்மையற்ற அல்லது அவமானத்திற்குரிய கவனிப்பு அல்லது தண்டனைக்கெதிரான சமவாயம்

- இச்சமவாயம் 1984 டிசெம்பர் 10 ஆந் திகதி ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை மாநாட்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- 1987 யூன் 26 ஆந் திகதி இச்சமவாயம் வலுவாக்கப்பட்டது.
- இதன் காரணமாக, யூன் 26 ஆந் திகதி சித்திரவதைக்கு ஆளான பாதிக்கப்பட்டோருக்கு ஒத்துழைப்பு வழங்கும் சர்வதேச தினமாக பெயர் குறித்துரைக்கப்பட்டது.
- ஏற்கனவே 162 அரசுகள் இச்சமவாயத்தில் பங்குதாரர்களாகி உள்ளனர்.

(இது பற்றி மேலதிக விபரங்களை கீழ்காணும் இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம் - http://www.ohchr.org/EN/HRBodies/Pages/TreatyBodies.aspx)

## 06. சித்திரவதை மற்றும் ஏனைய குரூர, மனிதநேயமற்ற அல்லது அவமானத்திற்குரிய கவனிப்பு அல்லது தண்டனைக்கு எதிரான சமவாயம் மீது, இலங்கைக்கு தொடர்பு உண்டா?

- இச்சமவாயத்திற்கு இலங்கை 1994 ஜனவரி 03 ஆந் திகதி கையொப்பமிட்டு இச்சமவாயத்தின் பங்குதாரர் ஆனது.

- இச்சமவாயத்தின் பங்குதாரராகி ஓராண்டிற்குள் அரச தரப்பு தனது முதலாவது அறிக்கையை சித்திரவதைக்கு எதிரான கமிட்டிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- அதற்கமைய, இலங்கை 1995 பெப்ருவரி 01 ஆந் திகதி இவ்வறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமெனவும், அவர்கள் மேற்படி அறிக்கையை 1997 ஒக்டோபர் 27 ஆந் திகதி கமிட்டிக்கு சமர்ப்பிக்கும்.

- இவ்அறிக்கைக்கு அமைய கமிட்டி 1998 மே 19 ஆந் திகதி தனது பரிந்துரைகளை வெளியிட்டது.

- பின்னர் வரும் ஒவ்வொரு 04 ஆண்டுகளுக்கு ஒருமுறை அரச தரப்பினரால் தமது அறிக்கையை கமிட்டியின்முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

- இதற்கமைய, 1999 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதி, இலங்கை தனது இரண்டாவது அறிக்கையை கமிட்டியின்முன் சமர்ப்பித்திருத்தல் வேண்டும். ஆனால், அவர்கள் 2004 மார்ச் 29 ஆந் திகதியே அவ்வறிக்கையை சமர்ப்பித்தது.

- அதற்குப் பின்னர், இலங்கை தனது மூன்றாவது அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை. அதேசமயம் நான்காவது அறிக்கை 2009 ஆகஸ்ட் 14 ஆந் திகதி கமிட்டியின் முன் சமர்ப்பித்தது.

- ஐந்தாவது அறிக்கை 2015 நொவெம்பர் 25 ஆந் திகதி சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் முன்னரைப்போல் செயற்படாது இலங்கை தனது அறிக்கையை மேற்படி திகதிக்கு முன்னர், அதாவது 2015 ஒக்டோபர் மாதம் 16 ஆந் திகதி கமிட்டியின்முன் சமர்ப்பித்தது.

- இன்றைய நிலையில் சித்திரவதைக்கு எதிரான கமிட்டியினால் தனது பரிந்துரைகளை இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்பட்டுள்ளது.

- இப்பரிந்துரைகள் 2017 ஜனவரி 27 ஆந் திகதி கமிட்டியினால் வெளியிடப்பட்டது.

- இதன்போது சித்திரவதைக்கு எதிரான கமிட்டி அமர்வுகளை நடத்தும் முறைபற்றி ஆராய்ந்து பார்ப்பதே எமக்கு முக்கியமாகும்.

சித்திரவதைக்கு எதிரான கமிட்டியின் அமர்வுகள்

- அரச தரப்பினரால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கமிட்டி கூட்ட அமர்வுகளை நடத்தும்.
- ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மற்றும் நொவெம்பர் ஆகிய மாதங்களில் இக்கூட்ட அமர்வுகள் நடைபெறும்.
- இவ்வறிக்கைகள் பற்றிய கலந்துரையாடல்கள் பகிரங்கமாக நடைபெறும்.
- இதற்கு கமிட்டி உறுப்பினர்கள் இல்லாத வேறு தரப்பினரும் பங்குபற்றுவர்.
- அரச சார்பற்ற அமைப்புக்கள் இதன்போது பங்களிப்புச் செய்கின்றன.
- இக்கலந்துரையாடல்களின்போது சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை ஆய்வு செய்வதற்கு அப்பாற் சென்று மேற்படி அறிக்கைகளின் உண்மை, பொய் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.
- கமிட்டி அரச தரப்பினருடன் நடத்தும் கூட்ட அமர்வுகளுக்கு முன்னர் நடத்தும் முற்கூட்டத் தொடர்களின் ஊடாக மேற்படி அரச சார்பற்ற மற்றும் சிவில் அமைப்புக்கள் எழுத்து மூலமும், வாய்மொழி மூலமும் வழங்கும்.
- இதன்மூலம் அறிக்கைகளை சமர்ப்பிக்கும் அரச தரப்பினர் மனித உரிமைகளைப் பற்றிய ஏற்புடைய முக்கிய தகவல்களைப் பெறுவதற்கு கமிட்டிக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது.

- அதேசமயம் கமிட்டியினால் ஐக்கிய நாடுகளில் மனித உரிமைகள் பேரவையின்மூலம் அரசுகள் அல்லது பல்வேறு தொனிப்பொருள்களுக்காக நியமிக்கப்படும் விசேட அறிக்கையாளர்களின் அறிக்கைகளையும், கற்கைகளையும் அதற்கு சமாந்திரமாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிறுவனங்களினால் மேற்படி நாட்டிற்கு ஏற்புடைய வகையில் உருவாக்கிக்கொள்ளும் முன்மொழிவுகள் என்பன மீதும் கவனம் செலுத்தப்படும்.

- இவை அனைத்தும் கமிட்டியின் மூலாதாரங்களாக பயன்படுத்துவதினால் அரசுகளுக்கு பொய் அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு இல்லாமற் போகிறது.

மாற்று அறிக்கை - நிழல் அறிக்கை (Shadow Report) மீதும் கமிட்டி தனது கவனத்தை ஈர்க்கிறது.

- சிவில் சமூகத்தின் சனசமூகப் பிரிவுகளினால் குறித்துரைக்கப்பட்ட நாட்டில் மனித உரிமைகள்பற்றி அவதானமாக இருத்தல் இதன்மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.

- அரச சார்பற்ற நிறுவனங்கள் இப்பணியின்போது பிரபலமான முறையில் மேலோங்குவதோடு சில சிவில் சமூக அமைப்புக்கள் கூடி ஒன்றிணைந்த அறிக்கைகளை அனுப்புவதற்கு அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வர்.

- அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் வழங்கும் தகவல்களை உறுதிப்படுத்துவதோ அல்லது நிராகரிப்பதோ பற்றி கமிட்டி அரச தரப்பினருடன் எடுத்துக் கூறும்.

- இதற்கமைய கமிட்டியில் அறிக்கையிடும் செயற்பாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு உயர்ந்த இடம் கிடைத்துள்ளது

- இவ் அறிக்கை பரீசீலனைக்கு கமிட்டி கடமைப்பட்டுள்ளது.

- இந்த கற்கையின் பின்னர் கமிட்டியின் பரிந்துரைகள் உள்ளடக்கிய நிறைவு அவதானிப்பு அறிக்கை (Concluding Observations) அரசுகளுக்கு அனுப்பப்படுகின்றன.

- கமிட்டியின் இந்நடவடிக்கை அங்கத்துவ நாடுகள் மீது பொதுவாக இடம்பெறுவதைவிட ஒவ்வொரு அரச மட்டத்தில் இடம்பெறுகிறது.

- கமிட்டியினால் பொதுக் கருத்துரைகள் (General Comments) அறிக்கை வெளியிடப்படும்.

■ இவை தனிப்பட்ட ரீதியாக இல்லாது பொதுவாகவே நடைபெறும்.

- ❖ Right to Life மனித உரிமைகள் மத்திய நிலையத்தை முதன்மையாகக் கொண்ட சித்திரவதைக்கு எதிரான சிவில் அமைப்புகளின் கூட்டு 2011 இலும், 2016 ஆகிய ஆண்டுகளில் கமிட்டி மீது ஒன்றிணைந்த அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.
- ❖ மேற்படி அறிக்கைகள்மூலம் அந்தந்த காலகட்டங்களில் இலங்கையில் ஏற்பட்ட சித்திரவதைகள் பற்றிய நிலைமைகள் சுட்டிக்காட்டப்பட்டது.
- ❖ சில சந்தர்ப்பங்களின்போது கமிட்டி முன்வைத்த பரிந்துரைகள்மூலம் இந்த ஒன்றிணைந்த அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட சம்பவங்கள் பற்றி அரசை கேள்விக்குட்படுத்தும் தன்மையைக் காணமுடிகிறது.
- ❖ உதாரணமாக, 2011 அறிக்கைமூலம் சுட்டிக்காட்டியவாறு ஜெரால்ட் மேர்வின் பெரேரா, சுகத் நிசாந்த படுகொலைச் சம்பவங்கள், 2016 அறிக்கைமூலம் சுட்டிக்காட்டியவாறு சந்துன் மாலிங்க, நிமல் சந்திரசிறி படுகொலை சம்பவங்கள்பற்றி நடைபெறும் விசாரணைகளைப்பற்றி கமிட்டி வெளியிட்ட பரிந்துரைகள்மூலம் அவர்கள் அரசை கேள்விக்குட்படுத்தினர்.

- ❖ கமிட்டியினால் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கும் பணியின்போது அரசுகள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளுக்கமைய மேற்படி அரசு மனித உரிமைகள்பற்றிய நிலைமையை மதிப்பாய்வுக்கு உட்படுத்த முடியும்.
- ❖ அரச தரப்பினரால் முன்வைக்கப்படும் அறிக்கைகளை ஆய்வுக்குட்படுத்தும் சந்தர்ப்பங்களில் கமிட்டியின் உறுப்பினர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு கமிட்டி பெற்ற விடைகள், ஏனைய மூலாதாரங்கள் மூலம் கமிட்டி உறுப்பினர்கள் பெற்ற தகவல்கள் என்பன இப்பரிந்துரைகளை வெளியிடும்போது கமிட்டி கவனத்திற்கொண்டுள்ளது.
- ❖ ஏற்புடைய சமவாயத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அரச தரப்புக்குரிய கடப்பாடுகள் பூரணத்துவம் அடைந்துள்ளதா? இல்லையா? என்பதுபற்றி இப்பரிந்துரைகள் வெளியிடும் அறிக்கைமூலம் அதிகாரிகளின் தீர்மானங்கள் உள்ளடக்கிய ஓர் பிரகடனமாகக் கருதப்படும்.
- ❖ இப்பரிந்துரைகள் நேரடியான கடப்பாடுகளின்றி வெளியிடப்பட்டாலும் அரச தரப்பினர் உருவாக்கிக்கொண்ட உடன்படிக்கை ரீதியான கடப்பாட்டின்மூலம் தாம் கடப்பாடு கொண்டுள்ளமையால் மேற்படி பரிந்துரைகளை நிராகரிக்காத கடமை அரசு தரப்புக்களுக்கு உண்டு.

- ❖ சமவாயத்தில் கையொப்பம் இடுவதன்மூலம் மாத்திரம் மேற்படி சமவாயம் ஒரு நாட்டிற்குள் செயற்படுத்தப்பட மாட்டாது.
- ❖ இதற்கென மேற்படி சமவாயத்தின் ஏற்பாடுகள் உள்ளடக்கிய உள்நாட்டு சட்டங்கள் இயற்றப்பட வேண்டும்.
- ❖ சித்திரவதைக்கு எதிரான சமவாயம் உள்நாட்டு ரீதியிலும் ஏற்புடைமை ஆக்குவதற்கு உள்நாட்டில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.
- ❖ அவை 1994 இன் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் ஏனைய குரூரமான, மனிதநேயமற்ற, அல்லது அவமானத்திற்குரிய கவனிப்புக்கள் அல்லது தண்டனைகளுக்கு எதிரான சமவாய சட்டம்.

# 07. 1994 இன் 22 ஆம் இலக்க சித்திரவதை மற்றும் ஏனைய குரூர, மனிதநேயமற்ற அல்லது நிந்தனையுடன் கவனிக்கப்படும் அல்லது தண்டனைகளுக்கெதிரான சமவாயச் சட்டம்

- சித்திரவதைக்கு எதிரான சமவாயத்தை வலுவாக்கம் செய்வதற்கு அதன் கடப்பாடுகளைச் செயற்படுத்தும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

- சட்டத்தின் 2(1) மற்றும் 2(2) வாசகங்களுக்கு அமைய

தனிநபருக்கு,

- சித்திரவதை மேற்கொள்ளப்படும்,
- அவ்வாறு செய்வதற்கு முயற்சிக்கும்,
- உதவி ஒத்தாசை வழங்கும்,
- சதிசெய்யும் மற்றுமொரு நபர்,

சட்டத்தின்கீழ் குற்றம்புரிந்தவர் ஆவார்.

- ஆனால் 2(3) வாசகத்திற்கு அமைய, எழுத்துமூலமான சட்டத்தின் பிரகாரம் உரிய அதிகாரமுடைய நீதிமன்ற கட்டளைமீது ஒரு நபரை தண்டனைக்கு உட்படுத்துவதை இச்சட்டத்தின்கீழ் குற்றமாக கருதப்பட மாட்டாது

- சட்டத்தில் பொருள்கோடலுக்கு அமைய, "சித்திரவதை" என்பது,
  - ஒரு நபருக்கு அதிக உடல் அல்லது உளவியல் ரீதியான வேதனைகளை ஏற்படுத்தும் நடவடிக்கை,
  - ஒரு தனிநபருக்கு குறித்துரைக்கப்பட்ட தகவலை அல்லது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு அல்லது,

- ➢ குறித்துரைக்கப்பட்ட நபர் மேற்கொண்ட அல்லது அவ்வாறு சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைக்கு தண்டனை வழங்குவதற்காக அல்லது,
- ➢ அத்தகைய தனிநபரை அச்சுறுத்துவதற்கு, அவரைக் கட்டாயப்படுத்துவதற்கு அல்லது,
- ➢ பாரபட்சமாகச் செயற்படுவதற்கு அடிப்படையான வேறு காரணியினால்,

❖ அரச அதிகாரி அல்லது உத்தியோகபூர்வமாக செயற்படும் வேறொரு நபர் அல்லது,

❖ மேற்படி அதிகாரி அல்லது வேறு நபரின் முல்வீம அல்லது,

❖ விருப்பத்துடன் அல்லது,

❖ மேற்படி அதிகாரியின் அல்லது வேறொரு நபர் எதிர்ப்புத் தெரிவிக்காமையால் செயற்படுத்தப்படும் ஒரு நடவடிக்கையெனக் கருதப்படும்.

■ 2(4) வாசகத்திற்கு அமைய, சட்டத்தின்கீழ் தொடரப்படும் வழக்கு மேல்நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட வேண்டும்.

❖ இதற்கமைய, சட்டத்தின்கீழ் சட்டமா அதிபரே வழக்குத் தொடர வேண்டும்.

■ இத்தகைய வழக்கின்போது குற்றம்புரிந்த நபர்

❖ 07 ஆண்டுகளுக்கு குறையாத, 10 ஆண்டுகளுக்குக் கூடாத காலம் சிறைத்தண்டனை வழங்கப்பட வேண்டும்.

❖ பத்தாயிரம் ரூபாய்க்கு குறையாத, ஐயாயிரம் ரூபாய்க்கு கூடாத தண்டப் பணத்திற்கு ஆளாக்கப்பட வேண்டும்.

■ சட்டத்தின் 3 ஆவது வாசகத்திற்கு அமைய ஒரு நபர்

❖ போர் நிலைமை
❖ போர் அச்சுறுத்தல்
❖ உள்நாட்டு அரசியல் ஸ்திரமின்மை அல்லது,
❖ பொதுமக்கள் அவசரகால நிலைமை இருக்கும்போது

உயர் அதிகாரி அல்லது அரச அதிகாரசபையின் கட்டளையின்கீழ் சித்திரவதையை மேற்கொண்ட குற்றத்தைப் புரிந்தாரென பிரகடனப்படுத்துதல் இச்சட்டத்தின்கீழ் நியாயப்படுத்த முடியாமல் இருக்கும்.

## 08. மனித உரிமைகள் பற்றிய உயர் ஆணையர் பணியகம் (Office of the High Commissioner for Human Rights - OHCHR)

- மனித உரிமை மேம்படுத்த மற்றும் பாதுகாக்க நிறுவப்பட்டுள்ளது.
- 1993 டிசம்பர் 20 ஐக்கிய நாடுகள் சபையின் பொது கூட்டத்தின்போது இப் பணியகம் ஸ்தாபிக்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையில் மளித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- மற்றும் இப் பணியகம் மனித உரிமை பேரவையின் செயற்பாடுகளை கண்காணிக்கும்.
- இப் பணியகத்தின் தற்போதைய ஆணையாளர், ஜோர்தான் நாட்டு அரசன் செயிட் பின் ராட் ஆவார்.